**அநுராதபுர ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

அநுராதபுர ஒருங்கிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்குமான பிரென்ஜ் முகவராண்மைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 31 இன் சீஎல்கே-100901 ஆர் ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3 பிரிவு மற்றும் 2017 ஆகஸ்ட் 31 இன் கடன் வசதி உடன்படிக்கையின் திருத்தப்பட்ட 3.4.4 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை செயற்றிட்டத்தின் அமுல்படுத்தல் முகவராகவும் காணப்படுகின்றது. அநுராதபுர நகரத்தின் புனித மற்றும் நவீன பிரதேசங்களுக்கிடையே இணைந்த அபிவிருத்தியின் நடுநிலையான விதத்தினை மேம்படுத்துவது செயற்றிட்டத்தின் நோக்கமாகும். கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 9,779.95 மில்லியனிற்குச் சமமான யூரோ 62.40 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 8,149.96 மில்லியனிற்குச் சமமான யூரோ 52 மில்லியன் அபிவிருத்திக்கான பிரென்ஜ் முகவராண்மையினால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 திசெம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்றிட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இற்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணங்கள் - 770 | பொருள் அளவைச் சபையில் பயன்படுத்தப்படாத வகைகள் இனங்காணப்பட்டிருக்கவோ அல்லது அவை தொடர்பில் தேவையான நடவடிக்கைகளினை எடுக்கக் கூடியவாறு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இருப்பு பதிவேடுகளினை நாளதுவரையாக்க முடியாது போகும். | வகைகளில் அதிகமானவை 02 வருடங்கள் ஆயுட் காலத்தைவிடவும் குறைந்த நுகரத்தக்கவையாகக் காணப்படுகின்றதுடன் எவ்வித நிலையான சொத்துக்களிலும் உள்ளடக்கப்படவில்லை | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்து பதிவேடொன்று செயற்திட்டத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் தொடர்பில் பலவீனமான கட்டுப்பாடுகள் | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் முறைமையினை அமுல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தேடப்படுகின்றன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களினைப் பின்பற்ற வேண்டும். |
| (இ) | கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம் பட்டியல் | மீளாய்வாண்டிற்கான நிதி மற்றும் பௌதீக இலக்குகள் மற்றும் பாதீட்டுடன் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த காலப்பகுதியினையும் மேவுகை | பலவீனமான கண்காணிப்பு பொறிமுறை, நிதி மற்றும் பௌதீக கட்டுப்பாடுகள் | ஆலோசனை சேவைகள் தொடர்பிலான அளிப்புக்கள் இறுதியாக்கப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | வினைத்திறனான வகையில் செயல் முறைமைகளினை மேற்கொள்ளும் பொருட்டு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யக்கூடியவாறு அகல்விரிவான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று செயற்திட்டத்தினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | வடிவமைக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயல் முன்னேற்றல்

| | மூலக்கூறு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பௌதீக செயலாற்றல் எதிர்பார்க்கப் பட்டது | அடையப்பெற்றது | தாக்கம் | தாமதங்களுக்கான காரணம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | % | % | | | | |
| (அ) | நிலைபேறான நகர உட்கட்டமைப்பி னை இனங்காணல் | 100 | Nil | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளினையும் அமுல்படுத்துவதில் தாமதங்கள் மற்றும் செயற்திட்டத்தின் காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை. | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டங்களினை சமர்ப்பிப்பதில் தாமதங்கள் | போக்குவரத்து பிரதான திட்டம் மற்றும் வீரியமான நீர் திட்டத்தின் தயாரிப்பு தவிர்க்க முடியாத காரணங்கள் காரணமாக தொடர்ந்தும் தாமதமடைந்து காணப்பட்டன. | செயற்திட்டத்தின் நோக்கங்களினை அடைந்து கொள்ளும் பொருட்டு திடமான வினைத்திறன் வாய்ந்த ஒப்பந்த முகாமைத்துவ முறைமை பிரயோகிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | விபரமான வடிவமைத்தல் தொடர்பான ஆலோசனை சேவை | 100 | 33 | - மேற்படி - | 2018 ஒக்தோபர் 12 இல் ஆலோசனையாளர் களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை மீளாய்வாண்டின் | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | | இறுதி வரையிலும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

## 3.2 குறைப்பயன்பாட்டுடைய வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கடனளிப்பு முகவரினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,149.96 மில்லியனுக்குச் சமமான யூரோ 52 மில்லியன் மொத்த ஒதுக்கீடுகளில் 2 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 146.58 மில்லியனுக்குச் சமமான யூரோ 0.91 மில்லியன் தொகையொன்று மாத்திரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்த பின்னர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினூடாக ரூபா 345 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டின் போது ரூபா 149.41 மில்லியன் தொகையொன்று மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதியினை நீடிப்புச் செய்வதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றமை | ஆலோசனையாளர்களினால் விபரமான வடிவமைப்புக்களினை சமர்ப்பித்தல் தொடர்பில் ஏற்பட்ட தாமதத்தினால் நிதிகளின் பயன்படுத்துகையினை பிரதானமாக தாக்கமளித்திருந்தது. | வினைத்திறனான வகையில் நிதித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 நவம்பரில் மேலதிக செயற்திட்ட பணிப்பாளரின் குடியிருக்கும் நோக்கத்திற்காக செய்றதிட்டத்தினால் வீடொன்று வாடகைக்கு | செயற்திட்டத்தின் செயற்பாடுகளினை அமுல்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் | தெரிவு செய்யப்பட்ட வீடு மேலதிக செயற்திட்டப் பணிப்பாளரினால் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் | சரிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| எடுக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்கு ரூபா 100,000 முற்பணமொன்றுகூட மேற்கொள்ளப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட வீடு 2019 மே வரையிலும் குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | ஏனைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன. | பின்னர் மற்றுமொரு வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டது. ரூபா 100,000 வைப்பினை மீளளிப்பதற்கு முன்னைய வீட்டு உரிமையாளர்க்கு வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. | |

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| பதவியணியினர் நிலைமை | 2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பதவிகளின் எண்ணிக்கை | | | தாக்கம் | முகாமைத்துவ கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | | | |
| பிரதி செயற்திட்டப் பணிப்பாளர் | 01 | Nil | 01 | செயற்திட்டத்தின் செயலாற்றலினை தாக்கமளிக்கும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எவ்வித அபிவிருத்தி செயற்பாடுகளும் அமுல்படுத்தப் பட்டிருக்காததுடன் சில பதவிகள் நிரப்பப்பட்டிராது தொடர்ந்தும் காணப்படுகின்றன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் வெற்றிடமான பதவிகள் நிரப்பப்படல் வேண்டும். |
| செயற்திட்ட நிபுணர்கள் | 03 | Nil | 03 | | | |
| உதவி செயற்திட்ட பணிப்பாளர்கள் | 11 | 04 | 07 | | | |

## 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்துடன் தொடர்புடைய கடமைப் பட்டியல் மீளாய்வாண்டின் இறுதிவரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஊழியர் செயலாற்றல் மதிப்பீட்டினை அமுல்படுத்த முடியாது | சில பதவிகளுக்கான கடமைப் பட்டியல்களின் தயாரிப்பு ஏற்கனவே | ஊழியர்களின் கடமைப் பட்டியல்கள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போகும். | பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றதுடன், மீதி பகுதி செயன்முன்னேற்றத்தில் காணப்படுகின்றதுடன் அது 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படும். | |
| (ஆ) | செயற்திட்ட ஊழியர்களின் ஆட்சேர்ப்பிற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மனித வள திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகாமையாளர், அபிவிருத்தி மற்றும் சமூக ஒருங்கிணைப்பாளர், கணனி தரவு செயற்படுத்துனர் மற்றும் சேவை உதவியாளர் ஆளணியினர் பதவிகள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பின் வெளிப்படைத் தன்மை பாதிப்படையக்கூடும். | அதனை நெறிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் முறையான ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல்களின் 6.1.4 ஆம் பிரிவின் பிரகாரம், விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களினை விநியோகிப்பதற்காக தனியானதொரு பதிவேடொன்று செயற்திட்டத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவொன்றாக, அரச பெறுகை வழிகாட்டல்களின் 3.4(ஊ) பிரிவின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 02 சந்தர்ப்பங்களில், ரூபா 557,100 கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட வகைகள் தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஆவணங்களினை விநியோகித்தமை தொடர்பில் | பிரயோகிக்கப்பட்ட பெறுகை செயன்முறை தொடர்பான வெளிப்படையான தன்மையின் பற்றாக்குறை காணப்படுகின்றமை. | விலைமனு ஆவணங்களினை விநியோகிப்பதற்கு முன்னர், செயற்திட்டப் பணிப்பாளரினால் ஒப்பந்ததாரர்கள் / விநியோகஸ்தர்களின் பட்டியல் அங்கீகரிக்கப்படுகின்றமை. | அரச பெறுகை வழிகாட்டல் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | |
| (ஈ) | நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடுகள், பெறுகைத் திகதிக்குப் பதிலாக, சொத்துக்களினை கொள்வனவு செய்த ஆண்டினைத் தொடர்ந்துவரும் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்கீட்டு பரிகாரங்கள் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கியிருக்கவில்லை. | இந்த பெறுமானத்தேய்வுக் கொள்கை செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து பின்பற்றப்பட்டிருக்கின்றது. | கணக்கீட்டு நியமங்களுடன் இணங்க வேண்டும். |